Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 326	உள்ளூர் - 26.11.2026	வியாழக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 326	வெளியூர் - 27.11.2026	வெள்ளிக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

பிறந்த தேதிப்படி தொழில் வாய்ப்புகள்!

தமிழக ஊராட்சி செயலர்: 1,400+ காலியிடங்கள்!

ஆளுநரிடம் உதயநிதி மனு!

டிச. 2-ல் அதிமுக ஆர்ப்பாட்டம்!

இந்திய பொருட்களுக்கு 25% வரி விதிக்க அமெரிக்கா திட்டம்.. மத்திய அரசு சொல்வது என்ன?

புதுடெல்லி, நவ. 26–

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்க அமெரிக்கா முன்மொழிந்துள்ளது. இதுதொடர்பான அறிவிப்பை ஆய்வு செய்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தலைமையிலான அரசு, இந்தியா உள்ளிட்ட 14 நாடுகளின் உற்பத்தித் துறைகள் தொடர்பாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இந்த வரி விதிப்பு நடவடிக்கையை முன்மொழிந்துள்ளது.



இந்தியாவின் உற்பத்தித் திறன் தேவைக்கு அதிகமாக இருப்பதாகவும், இந்தியா தனது சந்தையை வெளிநாட்டு நிறுவனங்கள் எளிதில் அணுக அனுமதிப்பதில்லை என்றும் அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. இதனால் அமெரிக்க நிறுவனங்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

காசி தமிழ் சங்கமம் 5.0: சிறப்பு ரயிலைத் தொடங்கி வைத்தார் ஆளுநர்!

சென்னை, நவ. 26–

காசி தமிழ் சங்கமம் 5.0 நிகழ்வில் பங்கேற்கும் மாணவர் பிரதிநிதிகளுக்கான கன்னியாகுமரிபனாரஸ் சிறப்பு ரயிலை (06041), தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நவம்பர் 26–ம் தேதி சென்னை எழும்பூரில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். ஆளுநருடன் அவரது துணைவியார், சென்னை ஐஐடி இயக்குநர் பேராசிரியர் வி. காமகோடி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் சந்திரசேகர் ஆகியோர் பங்கேற்றனர்.



காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்கும் 207 பேர் கொண்ட முதல் குழுவில், 105 பேர் சென்னை எழும்பூரில் இருந்து இந்த ரயிலில் பயணிக்கின்றனர். ரயில் நவம்பர் 27–ம் தேதி பனாரஸ் சென்றடையும். நிகழ்வுக்காக கன்னியாகுமரி, சென்னை மற்றும் கோயம்புத்தூரை பனாரஸுடன் இணைக்கும் ஏழு ஜோடி சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே ஏற்பாடு செய்துள்ளது. மாணவர்கள் வாரணாசியில் தங்கியிருக்கும் காலத்தில் வில்லுப்பாட்டு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் உள்ளிட்ட தமிழர் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளனர். ஒரு மாதம் நடைபெறும் காசி தமிழ் சங்கமத்தின் 5–வது பதிப்பு, "திருக்குறள் கற்போம்" என்ற கருப்பொருளில் நடைபெறுகிறது.

மகளிர் இடஒதுக்கீட்டை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது; பிரதமர் மோடி!

புதுடெல்லி, நவ. 26–

மகளிர் இடஒதுக்கீடு தொடர்பாக எதிர்க்கட்சிகளை பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.பிரதமர் மோடி வெளியிட்ட அரசியலமைப்பு தினச் செய்தியில், பெண்களுக்கு சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதற்கான மகளிர் இடஒதுக்கீடு மசோதா குறித்து குறிப்பிட்டுள்ளார். இந்த மசோதா நிறைவேறுவதை எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு கட்சி தடுத்ததாக காங்கிரசை மறைமுகமாக சாடியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் பங்களித்த பெண் சமூகத்தை அங்கீகரிக்காமல் அதன்



பயணம் முழுமையடையாது. ஆனால், இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற சம்பவம் நம் அனைவருக்கும் வெட்கத்தை ஏற்படுத்த வேண்டும். சட்டமன்ற அமைப்புகளில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட மசோதாவை எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு கட்சி நிறைவேற விடாமல் தடுத்தது. இது அரசியலமைப்பு மீதான அவர்களின் அலட்சியத்தை வெளிப்படுத்துகிறது. இந்தியாவின் பெண் சக்திக்கு நான் உறுதியளிக்கிறேன். அவர்களுக்கு உரிய நீதி கிடைப்பதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்க்கட்சியின் முக்கிய கட்சி, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படுவதற்குப் பதிலாக, தடைகளை ஏற்படுத்தும் கட்சியாக மாறிவிட்டதாகவும் மோடி விமர்சித்துள்ளார்.அரசியலமைப்பு தினம் இன்றுநாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படும் நிலையில், பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இந்தச் செய்தி அரசியல் வட்டாரத்தில் கவனம் பெற்றுள்ளது.

தேசிய பால் தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் விஜய் வாழ்த்து!

சென்னை, நவ. 26–

தேசிய பால் தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு:–

வெண்மைப் புரட்சி மூலம், நாட்டின் பால்வளத்தைப் பெருக்குவதில் பெரும்பங்காற்றிய டாக்டர் வர்கீஸ் குரியன் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் தேசிய பால் தினத்தில், பால் உற்பத்தி சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியின் மூலம் கிராமப்புற



பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் விவசாயப் பெருமக்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும் நாட்டின் உணவுப் பாதுகாப்பிலும், ஊட்டச்சத்து மேம்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நமது அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் காத்திடும் வகையில் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 6 ரூபாய் உயர்த்தி வழங்கியதோடு, ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், பால் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு, பால் உற்பத்தியாளர்களின் வாழ்வில் வளத்தையும், மகிழ்ச்சியையும் பெருக்கிட நமது அரசு என்றும் துணை நிற்கும்!

திருப்பரங்குன்றம் தீபம் விவகாரம்; முதல்-அமைச்சர் விஜய்க்கு வக்கீல் நோட்டீஸ்!

சென்னை, நவ. 26–

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவை அமல்படுத்தாதது தொடர்பாக திருமலை திருப்பதி தேவஸ்தான முன்னாள் அறங்காவலர் குழு உறுப்பினர் பானுபிரகாஷ் ரெட்டி சார்பில், முதல்–அமைச்சர் விஜய்க்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவ தற்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது. ஆனால் தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. இதுதொடர்பாக திருமலை திருப்பதி தேவஸ்தான முன்னாள் அறங்காவலர் குழு உறுப்பினரும், சமூக ஆர்வலருமான ஜி.பானுபிரகாஷ் ரெட்டி சார்பில் தமிழக முதல்–அமைச்சர் விஜய்க்கு, வக்கீல் கே.அஜய்குமார் நோட்டீஸ் அனுப்பி



உள்ளார்.அதில் திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்த உத்தரவு களை தமிழக அரசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமல்படுத்த தவறிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்திருப்பதால் மட்டுமே அந்த உத்தரவு தானாகவே நிறுத்தி வைக்கப்படாது. சம்பந்தப்பட்ட கோர்ட்டு உத்தரவை நிறுத்தி வைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ செய்யும் வரை, அதிகாரிகள் அதனை அமல்படுத்த வேண்டியது கட்டாயம் ஆகும். நோட்டீஸ் கிடைத்த 48 மணி நேரத்திற்குள், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவை அமல் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதனை செயல்படுத்த தவறியதற் கான காரணங்களை தெரிவிக்க வேண்டும். தமிழக அரசிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்காவிட்டால், சம்பந்தப்பட்ட கோர்ட்டுகளில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது.

60 டன் தங்கம் நாடு திரும்பியது!

6 மாதங்களில் ஆர்.பி.ஐ. அதிரடி! மொத்த இருப்பு 880 டன்!

84% தங்கம் இந்தியாவில்!!

புதுடெல்லி, நவ, 26–

விரைவான நிதி நிர்வாகம், முதலீடு மற்றும் பணமாக்கல் தேவைகளுக்காக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ.) தனது தங்க இருப்பின் ஒரு பகுதியை வெளிநாட்டு வர்த்தகச் சந்தைகளில் வைத்திருந்தது. ரஷ்யாவின் தங்க இருப்பை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் முடக்கியதைத் தொடர்ந்து, வெளிநாடுகளில் உள்ள தங்கத்தை இந்தியாவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையை ஆர்.பி.ஐ. தொடர்கிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக, டன் கணக்கிலான தங்கம் விமானம் மூலம் ரகசியமாகக் கொண்டு வரப்படுகிறது.

2026 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில், வெளிநா டுகளில் இருந்த 60.08 டன் தங்கம் இந்தியாவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஆர்.பி.ஐ. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவில் வைக்கப்பட்டுள்ள தங்க இருப்பு 680.05 டன்னிலிருந்து 740.13 டன்னாக உயர்ந்துள்ளது. செப்டம்பர் இறுதியில் ஆர்.பி.ஐ.யின் மொத்த தங்க இருப்பு 880.52 டன்; அதில் சுமார் 84.06



சதவீதம் உள்நாட்டில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டின் இரண்டாம் பாதியில் சுமார் 104 டன் தங்கம் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. மார்ச் இறுதியில் 115.40 பில்லியன் டாலராக இருந்த தங்க இருப்பின் மதிப்பு, தங்க விலை சரிவால் செப்டம்பர் இறுதியில் 106.08 பில்லியன் டாலராகக் குறைந்தது.

இந்தியாவுக்குச் சொந்தமான மேலும் 140.39 டன் தங்கம், பேங்க் ஆஃப் இங்கிலாந்து மற்றும் சர்வதேச தீர்வுகளுக்கான வங்கியின் (BIS) பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

டாலர் ஆதிக்கத்திலிருந்து விலகி தங்கத்தில் முதலீடு செய்யும் சீனாவின் போக்கைப் போல, விலை சரியும் காலங்களில் இந்தியாவும் தங்கம் வாங்கி வருவதாகக் கட்டுரை குறிப்பிடுகிறது. எனினும், இந்த ஆறு மாதங்களில் மொத்த தங்க இருப்பின் அளவில் மாற்றம் ஏற்படவில்லை.

சர்வதேசச் சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கம் 0.30 சதவீதம் உயர்ந்து 3,599.87 டாலராக இருந்தது. காமெக்ஸ் சந்தையில் டிசம்பர் மாதத் தங்க எதிர்கால ஒப்பந்த விலை 1.53 சதவீதம் வரை உயர்ந்து 3,589.80 டாலராக இருந்தது.

அரசியலமைப்பு தினம்: வளம்மிக்க தமிழ்நாட்டையும், ஆற்றல்மிகு இந்தியாவையும் உருவாக்க உறுதியேற்போம்! - முதலமைச்சர் விஜய்!

சென்னை, நவ. 26–

அரசியலமைப்பின் விழுமியங்களை நிலைநிறுத்தி, வளம்மிக்க தமிழ்நாட்டையும், ஆற்றல்மிகு இந்தியாவையும் உருவாக்க இந்நாளில் உறுதியேற்போம்!

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 அன்று அரசியலமைப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. 1949–ம் ஆண்டு இதே நாளில் இந்திய அரசியலமைப்பு சட்டம் அரசியலமைப்பு நிர்ணய சபையால் ஏற்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக இது கொண்டாடப்படுகிறது.

1949 நவம்பர் 26–ல் ஏற்கப்பட்ட இந்த அரசியலமைப்பு சட்டம், 1950 ஜனவரி



26 அன்று நடைமுறைக்கு வந்தது. அது குடியரசு தினமாக கொண்டாப்படுகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் விஜய் அரசியலமைப்பு தின வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26–ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவுகூரும் இந்திய அரசியலமைப்பு நாளான இந்நாளில், இச்சட்டத்தை உருவாக்கியதில் அரும்பங்காற்றிய தலைவர்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.

அரசியலமைப்பின் விழுமியங்களை நிலைநிறுத்தி, வளம்மிக்க தமிழ்நாட்டையும், ஆற்றல்மிகு இந்தியாவையும் உருவாக்க இந்நாளில் உறுதியேற்போம்!

ஜனநாயகமும், சகோதரத்துவமும், சமூக நீதியும் தழைத்தோங்கட்டும்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய நாட்டின் தூதர் ஃபிலிப் கிரீன் OAM, தென்னிந்தியாவிற்கான ஆஸ்திரேலிய நாட்டின் தூதர் சிலாய் ஸாக்கி, சென்னையிலுள்ள ஆஸ்திரேலிய நாட்டு துணைத் தூதரகத்தின் இணைத் தூதர் கேமரூன் நோபல், துணைத் தூதரக அதிகாரிகள் செல்வி கேத்ரினா நாப், வி. கார்த்திகேயன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 26.11.2026
பராபவ தமிழ் வருடம்
கார்த்திகை மாதம் 10-ம் தேதி

குழந்தைகளின் கல்வி: சம வாய்ப்பே நாட்டின் எதிர்காலம்!



ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளின் கல்வியில் உருவாகிறது. பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைப்பது மட்டுமே கல்வி அல்ல; ஒவ்வொரு குழந்தையும் புரிந்து கற்று, சிந்தித்து, தன்னம்பிக்கையுடன் வளர்வதே உண்மையான கல்வியின் நோக்கம்.

இந்தியாவில் கல்வி வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன. இருப்பினும், நகரம்கிராமம், ஏழ்மைவசதி, அரசுதனியார் பள்ளிகள் எனப் பல வேறுபாடுகள் குழந்தைகளின் கற்றல் அனுபவத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சில குழந்தைகளுக்கு புத்தகங்கள், இணையவசதி, தனிப்பயிற்சி கிடைக்கிறது; இன்னும் சிலருக்கு அடிப்படை கற்றல் வளங்களே எளிதில் கிடைப்பதில்லை. இந்த இடைவெளியைக் குறைப்பது அரசின் மட்டுமல்ல, சமூகத்தின் பொறுப்புமாகும்.

குழந்தைகள் பாடங்களை மனப்பாடம் செய்வதைவிட, அவற்றைப் புரிந்துகொண்டு வாழ்க்கையில் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். வாசிப்பு, எழுதுதல், கணிதம் ஆகிய அடிப்படைத் திறன்களுடன் அறிவியல் ஆர்வம், படைப்பாற்றல், கேள்வி கேட்கும் துணிவு ஆகியவற்றையும் பள்ளிக்கல்வி வளர்க்க வேண்டும். இதற்குத் தேவையானது தரமான பாடத்திட்டம் மட்டுமல்ல; குழந்தைகளின் தனித்திறனை அறிந்து ஊக்குவிக்கும் ஆசிரியர்களும் ஆவர்.

அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள், நூலகங்கள், ஆய்வகங்கள், பாதுகாப்பான வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும். டிஜிட்டல் கல்வி வளர்ந்துவரும் நிலையில், இணையம் அல்லது சாதனம் இல்லாததால் எந்தக் குழந்தையும் பின்தங்கிவிடக் கூடாது. தொழில்நுட்பம் ஆசிரியருக்குப் பதிலாக அல்ல; கற்றலை மேம்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

கல்வியுடன் குழந்தைகளின் உடல்நலம், ஊட்டச்சத்து, மனநலம் மற்றும் பாதுகாப்பும் கவனிக்கப்பட வேண்டும். மதிப்பெண்களை மட்டுமே வெற்றியின் அளவுகோலாகக் கருதாமல், ஒழுக்கம், மனிதநேயம், சமத்துவ உணர்வு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றையும் வளர்ப்பதே கல்வியின் முழுமை.

பெற்றோர், ஆசிரியர்கள், அரசு மற்றும் சமூகம் இணைந்து செயல்பட்டால், ஒவ்வொரு குழந்தைக்கும் கற்றுத் திறமை வெளிப்படுத்தும் சூழலை உருவாக்க முடியும். குழந்தைகளின் கல்வியில் செய்யப்படும் முதலீடு, நாட்டின் நாளைய வளர்ச்சிக்கான அடித்தளம். அந்த அடித்தளம் வலுவாக அமைந்தால்தான் சமத்துவமும் முன்னேற்றமும் கொண்ட இந்தியாவை உருவாக்க முடியும்.

எழுதியவர்: ப. பாண்டியராஜன்

தீபத்தூணில் தீபம் ஏற்றுவது; திருப்பரங்குன்றம் ஸ்தானிக பட்டர்கள் மறுப்பு!



திருப்பரங்குன்றம், நவ. 26– திருப்பரங்குன்றம் மலை மேல் உள்ள தீபத்துாணில் கார்த்திகை தீபம் ஏற்ற உச்சநீதிமன்றம்– உத்தர விட்ட நிலையில், நேற்றுமுன்தினம் ஏற்றப்படவில்லை. இதுகுறித்து விளக்கமளித்த கோயில் நிர்வாகம், ஆகமவிதிப்படியும், ஸ்தானிக பட்டர்களின் கருத்து அடிப்படையில் ஏற்றப்படவில்லை என தெரிவித்தது.

இதுதொடர்பாக தங்களிடம் கலந்தா லோசிக்க வில்லை என ஸ்தானிக பட்டர்கள் மறுப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ள னர். திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. வழக்கமாக கார்த்திகை தீபம் ஏற்றப்படும் உச்சிப்பிள்ளையார் கோயில் மண்டபம் அருகிலுள்ள மண்டபத்தில் தான் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

இது குறித்து கோயில் சார்பில் ஒரு விளக்க அறிக்கை தரப்பட்டிருந்தது. அதில் உச்சி பிள்ளையார் கோயில் மண்டபத்தின் அருகே தீபம் ஏற்றப்பட்ட தற்கு கூறப்பட்ட காரணங்களில் 'ஸ்தானிக பட்டர்களின் கருத்துக்களின் அடிப்படையில்' என்றும் குறிப்பிடப்பட்டி ருந்தது. இதற்கு ஸ்தானிக பட்டர்கள் சுவாமிநா தன், பாலசுப்பிரமணியன், சொக்கு சுப்பிரமணியன், ஷண்முகசு ந்தரம் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து கோயில் துணை கமிஷனர் மற்றும் அறங்காவலர் குழு தலைவர், அறங்கா வலர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதில், 'திருக்கோயிலில் கார்த்திகை தீபம் ஏற்றுவது சம்பந்தமாக. நாங்கள் எந்த ஒரு கடிதமும் வழங்கவில்லை. உச்சிப் பிள்ளையார் கோயிலில் தீபம் ஏற்றுவது சம்பந்தமாக கடந்த ஆண்டு தான் தபால் அளித்துள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

உச்சநீதிமன்ற உத்தரவின் படி மலை மேல் தீபத்தூணில் தீபம் ஏற்றுவது சம்பந்தமாக நாங்கள் எந்த ஒரு கருத்தும் கூறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தாங்கள் ஊடகங்களுக்கு வெளியிட்ட கடிதத்தில் எங்களை கலக்காமல் எங்களது பெயர்களையும் சேர்த்து வெளியிட்டது எங்களுக்கு மிகவும் மன வேதனையை தருகிறது' என குறிப்பிட்டு உள்ளனர். இந்த கடிதங்கள் வெளியானபின் அறங்கா வலர் குழுவினர், அறநிலையத்துறையினர் இணைந்து பட்டர்களை கடிதத்தை வாபஸ் பெறும்படி வலியுறுத்துவதாக தகவல் வெளியானது. இதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கிராமத்தைச் சேர்ந்த ராமலிங்கம், சரவணன், சரவணகுமார், வெற்றிவேல்முருகன், ராஜேஸ்வரன், அருண் கூறியதாவது: இன்று (நேற்று) காலை முதல் ஸ்தானிக பட்டர் சுவாமிநாதன் வீட்டில் கோயில் துணை கமிஷனர் செல்வி, கண்காணிப்பாளர் ரஞ்சனி, எழுத்தர் மணிமாறன், அறங்காவலர் குழு தலைவர் சண்முகசுந்தரம், மற்றொரு அறங்காவலர் வந்துள்ளனர். ஸ்தானிக பட்டர்களை மிரட்டி அவர்கள் வெளியிட்ட கடிதத்திற்கு மறுப்பு கடிதம் கொடுக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இந்த தகவலறிந்து இரவு சுவாமிநாத பட்டர் வீட்டுக்கு நாங்கள் சென்ற பொழுது, சண்முகசுந்தரம், செல்வி, ரஞ்சனி, மணிமாறன் அங்கு இருந்தனர். 'ரகசிய கூட்டம் நடத்துகிறீர்களா, அலுவலகம் சம்பந்தமான விஷயமாக இருந்தால் கோயில் அலுவலகத்திலேயே பேசிக் கொள்ளலாமே' என கேட்டோம்.

சுவாமிநாத பட்டர் 'அவர்கள் எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்துள்ளனர்' என தெரிவித்தார். நாங்கள் போலீசார் மூலம் வெளியேற்றப்பட்டோம்' என்றனர். சுவாமிநாத பட்டர் வீட்டு முன்பு அவர்கள் நின்றிருந்த போது ராமலிங்கம் உள்ளிட்டோரை போலீசார் கைது செய்து வேனில் அழைத்துச் சென்றனர். 15 நிமிடங்கள் கழித்து துணை கமிஷனர், கண்காணிப்பாளர், எழுத்தர், சுவாமிநாத பட்டர் வீட்டில் இருந்து வெளியே சென்றனர்.

டிச. 2-ல் அதிமுக ஆர்ப்பாட்டம்!



சென்னை, நவ. 26– சட்டம் – ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு எதிராக தமிழகம் முழுவதும் வருகிற டிச. 2 ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழ்நாட்டில் பெண்களுக்குச் சிறிதும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை, அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து, மக்கள் சொல்லொ ண்ணாத் துயரத்தில் ஆழ்ந்திருப்பது, தமிழ்நாடு முழுவதும் கொலை, கொள்ளை, போதைப் பொருள் புழக்கம் எனச் சட்டம் – ஒழுங்கு அடியோடு சீர்கெட்டுள்ள அவல நிலை, மேக்கேதாட்டு பிரச்னையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் காப்பது உள்ளிட்ட பல்வேறு மக்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்து மௌனம் காத்து வரும் தவெக அரசைக் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பு ரீதியாகச் செயல்பட்டு வரும் 85 மாவட்டங்களின் சார்பில் வருகிற டிச. 2 ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். மக்கள் விரோத தவெக ரீல்ஸ் மாடல் ஆட்சியா ளர்களின் முகத்திரையைக் கிழிக்கின்ற வகையிலும், அவர்களு டைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத ஆட்சியை மக்கள் மன்றத்திலே அம்பலப்படுத்துகின்ற வகையிலும் நடைபெறும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர்கள் தலைமையிலும், மாவட்டக் கழகச் செய லாளர்கள் முன்னிலையிலும் நடைபெ றும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அதிமுகவினர் மட்டுமின்றி பெண்கள் உள்பட மக்கள் அனைவரும் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்லூரி விழாக்களில் இன்ஸ்டா, 'யூடியூப்' பிரபலங்களை அழைப்பதற்கு விரைவில் முற்றுப்புள்ளி!



சென்னை, நவ. 26– முன்பு கல்லூரி விழாக்களுக்கு கல்வி, அறிவியல், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள், கல்வி யாளர்கள் மற்றும் சமூகத்தில் சிறந்து விளங்குபவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்க ப்பட்டு வந்தனர். ஆனால், சமீபகாலமாக இன்ஸ்டாகிராம், யூடியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பிரபலமாக இருப்பவர்களை கல்லூரி விழாக்களுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கும் போக்கு அதிகரித்துள்ளது. இதற்கு கல்வியாளர்கள் உள்ளிட்ட பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

சில பட்டமளிப்பு விழாக்களில் போதிய தகுதியும் அனுபவமும் இல்லாத வர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைத்து மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கச் செ ய் வ தா க வு ம் உயர்கல்வித்துறையில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதையடுத்து, கல்லூரி விழாக்களுக்கு சிறப்பு விருந்தினர்களைத் தேர்வு செய்வதில் பின்பற்ற வேண்டிய தகுதிகள் மற்றும் விதிமுறைகள் குறித்து நிலையான வழிகாட்டுதல்களை வெளியிட உயர்கல்வித்துறையினர் திட்ட மிட்டுள்ளனர். இதன் மூலம் தகுதியா னவர்களுக்கு முன்னுரிமை அளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில சுயாட்சிக்கான திமுகவின் போராட்டம் தொடரும்- மு.க. ஸ்டாலின்!



சென்னை, நவ. 26– இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 அன்று அரசியலமைப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. 1949–ம் ஆண்டு இதே நாளில் இந்திய அரசியலமைப்பு சட்டம் அரசியலமைப்பு நிர்ணய சபையால் ஏற்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக இது கொண்டாடப்படுகிறது.

1949 நவம்பர் 26–ல் ஏற்கப்பட்ட இந்த அரசியலமைப்பு சட்டம், 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. அது குடியரசு தினமாக கொண்டாப்படுகிறது. இந்நிலையில், அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டு ள்ளார். அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:–

1949–ஆம் ஆண்டு இதே நாளில்தான், பல நூற்றாண்டுகளாகச் சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்திருந்த இந்தியாவில், சமத்துவத்தை உறுதிசெய்து சமூகநீதிக்கு அடித்தள மிட்ட முற்போக்கான அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டோம்.

காலந்தோறும் மாறிவரும் சமூகத்தின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப பரிணமிக்கும் உயிரோட்டமுள்ள ஆவணமாகவே நமது அரசியலமைப்புச் சட்டத்தை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் உருவாக்கினார்.

குடியரசாக நமது பயணத்தில், 75 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், இந்தியாவை உண்மையான கூட்டாட்சி நாடாக மாற்றிட அரசியலமைப்புச் சட்டத்தை விரிவான மறுஆய்வுக்கு உட்படுத்துவது இன்றியமையாதது ஆகிறது. இந்த நோக்கத்துடன்தான் உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் அவர்கள் தலைமையில் ஒன்றிய– மாநில உறவுகள் குறித்த உயர்மட்டக் குழுவை நமது திராவிட மாடல் அரசு அமைத்தது. தற்போதைய ஆட்சி யாளர்கள் அக்குழுவைக் கலைத்திரு ந்தாலும், மாநில சுயாட்சிக்காகவும் உண்மையான கூட்டாட்சியை நிலைநாட்டுவதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டம் தொடரும்! இந்த அரசியலமைப்புச் சட்ட நாளில், நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முற்போக்கான விழுமியங்களைப் பாதுகாக்கவும், அதன் கூட்டாட்சித் தன்மையை மேலும் வலுப்படுத்தவும் உறுதியேற்போம்!"

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரூ.1,000 கோடி டெண்டர் முறைகேடு: கே.என். நேரு சகோதரரின் உதவியாளர் கைது!



சென்னை, நவ. 26– கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிர்வா கத்துறையில் டெண்டர்கள் ஒதுக்கீடு செய்ததில் சுமார் ரூ.1,000 கோடி அ ளவிற்கு முறைகேடுகள் நடைபெ ற்றதாக எழுந்த புகாரின் அடிப்படையில், லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வழக்கில், முன்னாள் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேருவின் சகோதரர் ரவிச்சந்திரனின் உதவியாளராகச் செயல்பட்டு வந்த கவி பிரசாத் என்பவருக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, கவி பிரசாத்தின் செல்போன் உரையாடல்களில் சில முக்கிய ஆதாரங்கள் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. இதனடிப்படையில், விசாரணைக்காக கவி பிரசாத்தை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வியாழக்கிழமை (நவ. 26) காலை கைது செய்துள்ளனர். நகராட்சி நிர்வாகத்துறையில் நடைபெற்றதாகக் கூறப்படும் டெண்டர் முறைகேடு தொடர்பாக ஏற்கெனவே விசாரணை நடைபெற்று வரும் நிலையில், இந்தக் கைது சம்பவம் அரசியல் மற்றும் அதிகாரிகள் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கில் மேலும் யாருக்கெல்லாம் தொடர்பு, டெண்டர் ஒதுக்கீட்டில் முறை கேடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பது குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தொடர்ந்து விசாரிக்கின்றனர்.

ஜிமெயில் போல வாட்ஸ்அப்பில் மெசேஜ் அனுப்பும் புதிய வசதி!



சென்னை, நவ. 26– வாட்ஸ்அப்பில் குறுஞ்செய்திகளை முன்கூட்டியே திட்டமிட்டு அனுப்பும் வசதி உலகளவில் அறிமுகமாகிறது. தனிநபர் மற்றும் குழு உரையாட ல்களில், 10 நிமிடங்கள் முதல் 14 நாட்கள் வரை முன்கூட்டியே செய்தியைத் திட்டமிடலாம். அனுப்பும் பொத்தானை அழுத்திப் பிடித்து, தேதி மற்றும் நேரத்தைத் தேர்வு செய்தால் போதும்.

எழுத்துச் செய்திகள் மட்டுமின்றி, புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களையும் திட்டமிட்டு அனுப்பலாம். அனுப்புநரின் போன் அணைக்கப்பட்டிருந்தாலும், குறிப்பிட்ட நேரத்தில் செய்தி சென்றடையும். இந்த வசதி உலகளவில் படிப்படியாக வெளியிடப்படுவதாக வாட்ஸ்அப் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இருந்து வியட்நாமுக்கு தினசரி இணைப்பு விமான சேவை - இண்டிகோ!



சென்னை, நவ. 26– பயணியரின் வசதிக்காக சென்னை, கோவை, மதுரை, திருச்சியில் இருந்து, பெங்களூரு வழியாக, வியட்நாம் தலைநகர் ஹனாய்க்கு, தினசரி இணைப்பு விமான சேவையை, 'இண்டிகோ' அறிவித்துள்ளது. பயண நேரம் மற்றும் முன்பதிவு தொடர்பான விவரங்களை 'goindigo.in' என்ற இணையதளத்தில் தெரிந்து கொ ள்ளலாம். சென்னையில் இருந்து, தினசரி இரவு 8:45 மணி; கோவையில் இருந்து மாலை 4:35; மதுரையில் இருந்து பிற்பகல் 3:35; திருச்சியில் இருந்து காலை 8:30 மணிக்கு, விமா னங்கள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



பிறந்த தேதிப்படி தொழில் வாய்ப்புகள்!



எண் கணிதத்தின்படி, பிறந்த தேதியின் எண்ணைப் பொறுத்து ஒருவரின் திறமைகளும் பொருத்தமான தொழில் துறைகளும் அமையும் எனக் கூறப்படுகிறது.

எண் 1: தலைமைப் பண்பு, தன்னம்பிக்கை, முடிவெடுக்கும் திறன் கொண்டவர்கள். தொழில்முனைவு, வணிகம் மற்றும் உயர்மட்ட மேலாண்மைத் துறைகளில் சிறந்து விளங்கலாம்.

எண் 2 — பிறந்த தேதிகள்: 2, 11, 20, 29: பிறருடன் இணைந்து செயல்படுவதிலும் சூழலுக்கு ஏற்ப அனுசரிப்பதிலும் திறன் கொண்டவர்கள். கலை, நடிப்பு, ஆடை வடிவமைப்பு, ஊடகம், மக்கள் தொடர்பு மற்றும் தூதரகப் பணிகள் இவர்களுக்கு ஏற்றதாகக் கூறப்படுகிறது.

எண் 3 — பிறந்த தேதிகள்: 3, 12, 21, 30: திட்டமிடல் மற்றும் நிர்வாகத் திறன் கொண்டவர்கள். பொறியியல், கணக்கீடு, ஆராய்ச்சி, வங்கி நிர்வாகம், கல்வி மற்றும் சில்லறை வணிகத்தில் சிறக்கலாம்.

எண் 4 — பிறந்த தேதிகள்: 4, 13, 22, 31: வித்தியாசமாகச் சிந்தித்து புதுமையான முயற்சிகளில் ஈடுபடுவார்கள். தொழில்நுட்பம், ஆராய்ச்சி, வடிவமைப்பு, சிக்கல் தீர்வு மற்றும் உளவுத்துறைப் பணிகள் ஏற்றதாக இருக்கலாம். இவர்களின் அணுகுமுறை சில நேரங்களில் கெட்ட பெயரையும் ஏற்படுத்தலாம்.

எண் 5 — பிறந்த தேதிகள்: 5, 14, 23: சுறுசுறுப்பு, இனிய பேச்சு, தகவல் தொடர்புத் திறன் மற்றும் புதிய சூழலுக்கு ஏற்ப மாறும் தன்மை கொண்டவர்கள். சந்தைப்படுத்தல், ஊடகம், விளையாட்டு மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் வாய்ப்புகள் அதிகம்.

எண் 6 — பிறந்த தேதிகள்: 6, 15, 24: கவர்ச்சியான பேச்சு, ஆளுமை மற்றும் அழகுணர்வு கொண்டவர்கள். ஃபேஷன், அழகுசாதனத் துறை, உள் அலங்காரம், ஹோட்டல், உணவு தயாரிப்பு மற்றும் விருந்தோம்பல் துறைகள் பொருத்தமாக இருக்கலாம்.

எண் 7 — பிறந்த தேதிகள்: 7, 16, 25: ஆழ்ந்த சிந்தனையும் ஆராய்ச்சி ஆர்வமும் கொண்டவர்கள். ஆராய்ச்சி, தொழில்நுட்பம், கல்வி, தரவுப் பகுப்பாய்வு மற்றும் எழுத்துத் துறைகளில் சிறக்கலாம்; ஆன்மிகத்திலும் நாட்டம் இருக்கும்.

எண் 8 — பிறந்த தேதிகள்: 8, 17, 26: கடின உழைப்பும் பொறுப்புணர்வும் கொண்டவர்கள். வெற்றி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்; இருப்பினும் உயர்ந்த நிலையை அடையக்கூடும். அரசியல், நிர்வாகம், நீதித்துறை, ரியல் எஸ்டேட் மற்றும் மேலாண்மைத் துறைகளைப் பரிசீலிக்கலாம்.

எண் 9 — பிறந்த தேதிகள்: 9, 18, 27: தைரியமும் ஆற்றலும் கொண்டவர்கள்; வேலையை விரைவாக முடிக்க விரும்புவார்கள். பாதுகாப்பு, விளையாட்டு, பொறியியல், ரியல் எஸ்டேட் மற்றும் செயல்பாட்டு மேலாண்மைத் துறைகளில் சிறக்கலாம். தங்களின் வேகத்தையும் ஆற்றலையும் சரியான வழியில் பயன்படுத்த வேண்டும்.



சினிமா துளிகள்..!

நடிகை பார்வதிக்கு ஏடிஎச்டி பாதிப்பு!



தென்னிந்தியாவின் முன்னணி நடிகைகளில் ஒருவரான மலையாள நடிகர் பார்வதி திருவோத்து தனக்கு ஏடிஎச்டி (அட்டென்ஷன் டெஃபிசிட் ஹைபர் ஆக்டிவிட்டி டிஸ்ஆர்டர்) எனும் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

"சார்லி", "பெங்களூர் டேஸ்" உள்ளிட்ட மலையாள திரைப்படங்களில் நடித்ததன் மூலம் மொழிகளைக் கடந்து அறியப்படுபவர் நடிகை பார்வதி திருவோத்து.

இவர் தமிழில், இயக்குநர் பா. ரஞ்சித் – விக்ரம் கூட்டணியில் உருவான "தங்கலான்" படத்திலும், பாலிவுட்டில் மறைந்த நடிகர் இர்ஃபான் கானின் "காீப் காீப் சிங்கிள்" படத்திலும் நடித்துள்ளார்.

மேலும், திரைத்துறை மற்றும் சமூகத்தில் நிலவும் பாலினப் பாகுபாடுகள் ஆகியவற்றுக்கு எதிராகவும் நடிகை பார்வதி தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில், மலையாள தொகுப்பாளர் ரஞ்சனி ஹரிதாஸ் உடனான நேர்காணலில், தனக்கு ஏடிஎச்டி எனும் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக, நடிகை பார்வதி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, அவர் கூறுகையில்,

"எனக்கு ஏடிஎச்டி பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. அதைப் பெரிய விஷயமாக்க நான் விரும்பவில்லை. எனக்கு நேரம் வேறொரு விதத்தில் செயல்படுவது போலத் தோன்றுகிறது. தேவைப்பட்டால் என்னால் நேரத்தை நீட்டித்து உழைக்க முடியும். அதற்காக நான் தூக்கத்தை இழக்கிறேன் என்று அர்த்தமில்லை" எனக் கூறியுள்ளார்.

ஏற்கெனவே, நடிகர்கள் ஃபகத் ஃபாசில், ஆலியா பட் ஆகியோர் தங்களுக்கு ஏடிஎச்டி பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



ஜிம்மில் திடீர் மயக்கம்: அலட்சியம் வேண்டாம்!



40–50 வயதினருக்கு கண்டறியப்படாத இதயத் தமனி நோய், மாரடைப்பு அல்லது இதயத் துடிப்பு மாற்றங்கள் மயக்கத்துக்குக் காரணமாகலாம். நீர்ச்சத்துக் குறைவு, வெப்பப் பாதிப்பு, ரத்தச் சர்க்கரை குறைவும் மயக்கத்தை ஏற்படுத்தலாம். மருத்துவப் பரிசோதனை இன்றி தனிநபரின் பாதிப்புக்கான காரணத்தை உறுதிப்படுத்த முடியாது.

உடற்பயிற்சியின்போது நெஞ்சுவலி அல்லது இறுக்கம், வழக்கத்திற்கு மாறான மூச்சுத்திணறல், தலைசுற்றல், மயக்க உணர்வு, சீரற்ற அல்லது வேகமான இதயத் துடிப்பு, குளிர்வியர்வை, இடது கை, தோள்பட்டை, முதுகு அல்லது தாடையில் வலி ஏற்பட்டால் உடனே பயிற்சியை நிறுத்தி மருத்துவ உதவி பெற வேண்டும்.

ஜிம்மில் ஒருவர் மயங்கி, சுயநினைவின்றி இயல்பாகச் சுவாசிக்கவில்லை என்றால் அவசர உதவியை அழைத்து, மார்பின் மையத்தில் நிமிடத்திற்கு 100120 முறை அழுத்தம் கொடுத்து CPR செய்ய வேண்டும். AED கருவி கிடைத்தால் அதன் வழிமுறைகளைப் பின்பற்றிப் பயன்படுத்தவும். சுயநினைவற்றவருக்குத் தண்ணீர் கொடுக்கவோ, உதவியின்றிக் காத்திருக்கவோ கூடாது.

ஜிம்மில் சேரும் அனைவருக்கும் ECG, எக்கோ அல்லது டிரெட்மில் பரிசோதனை கட்டாயமில்லை. உடல்நிலை, நோய் மற்றும் குடும்ப மருத்துவ வரலாறு, அறிகுறிகள் ஆகியவற்றைப் பொறுத்து மருத்துவர் பரிசோதனையைப் பரிந்துரைப்பார். இதயநோய் ஆபத்துக் காரணிகள் உள்ளவர்கள் அல்லது நீண்டகாலமாக உடற்பயிற்சி செய்யாதவர்கள் தீவிரப் பயிற்சிக்கு முன் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

முதல்நாளிலேயே அதிக எடை அல்லது தீவிரப் பயிற்சியைத் தொடங்காமல், எளிய பயிற்சி மற்றும் மிதமான நடைப்பயிற்சியுடன் ஆரம்பித்து படிப்படியாக அதிகரிக்கவும். வார்ம்–அப், கூல்–டவுன் செய்யவும்; வலி, மூச்சுத்திணறல் அல்லது மயக்கம் ஏற்பட்டால் தொடர்ந்து பயிற்சி செய்யாமல் நிறுத்தவும்.



கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.பிரசன்னா ராமசாமி அரவக்குறிச்சி வட்டம், நாகம்பள்ளியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட நிறைவு விழாவில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.தங்கவேல் உள்ளார்.



கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ச.பிரசன்னா ராமசாமி கரூர் மாநகராட்சியில் நடைபெற்ற மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு கோலப் போட்டியினை பார்வையிட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் மாநகராட்சி ஆணையர் திரு.பிரதிவிராஜ் உள்ளார்.



பழனி ஒருங்கிணைந்த நீதிமன்றம் முன்பு பாரதிய ஜனதா கட்சி மற்றும் அகில பாரத வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில், திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரத்தில், உச்ச நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றாத, தமிழக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



பழனியில் மாவட்ட வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் ஜே பி சரவணன் பழனி கொடைக்கானல் சாலை விபத்தில் சிறப்பாக செயல்பட்ட ஆம்புலன்ஸ் ரியாஸ் என்பவருக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டினார்.

ஆளுநரிடம் உதயநிதி மனு!

சென்னை, நவ. 26–

கள்ளக்குறிச்சி எம்எல்ஏ அருள் விக்னேஷ் மீது மாவட்ட ஆட்சியருக்கு பாலியல் தொல்லை அளித்ததாக எழுந்துள்ள புகாரில், அவரைக் கைது செய்து வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தி, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரிடம் மனு அளித்தார்.



தமிழகத்தின் சட்டம்ஒழுங்கு நிலவரம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், காவல் மரணங்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் மனுவில் குறிப்பிட்டுள்ளார். இவை தொடர்பாக முதலமைச்சரிடம் அறிக்கை கோரவும், உரிய விசாரணை மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆளுநரிடம் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை, மதுரை உள்பட 7 இடங்களில் PFESI குறைதீர் முகாம்!

சென்னை, நவ. 26–

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (EPFO) மற்றும் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் (ESIC) சார்பில், நவம்பர் 27–ம் தேதி தமிழகத்தின் 7 இடங்களில் குறைதீர் முகாம்கள் நடைபெற உள்ளன.



சென்னை அயனாவரத்தில் உள்ள ESIC கிளை அலுவலகத்தில் சென்னைக்கான முகாம் நடைபெறும். மதுரை மண்டலத்தில் காலை 9.15 மணி முதல் மதுரை முனிச்சாலை, ராமநாதபுரம், தேனி, சிவகங்கை, சிவகாசி, பழனி ஆகிய இடங்களில் முகாம்கள் நடைபெறுகின்றன.

EPFO உறுப்பினர்கள், ஓய்வூதியதாரர்கள், நிறுவனங்கள் மற்றும் ESIC பயனாளர்கள் தங்களது குறைகள், கோரிக்கைகள், சந்தேகங்களை அதிகாரிகளிடம் நேரடியாகத் தெரிவித்து தீர்வு பெறலாம். தேவையான ஆவணங்களையும் கொண்டு செல்லலாம்.

டிவிஎஸ் குடும்பச் சொத்தில் சம பங்கு கோரி லட்சுமி வேணு வழக்கு!

புதுடெல்லி, நவ. 26–

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் தலைவர் வேணு சீனிவாசனின் மகள் லட்சுமி வேணு, குடும்பச் சொத்தில் தனக்குச் சம பங்கு வழங்கக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நவம்பர் 27ஆம் தேதி விசாரணைக்கு வர உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது கொள்ளுத்தாத்தா மற்றும் தாத்தாவின் பாரம்பரியச் சொத்துகளில், சகோதரர் சுதர்ஷன் வேணுவுக்கு உள்ள உரிமையைப் போலவே தனக்கும் உரிமை உண்டு என லட்சுமி வேணு மனுவில் கூறியுள்ளார். கூட்டுக் குடும்பச் சொத்துகளைப் பிரித்து, தனக்குரிய பங்கை ஒதுக்கவும், பலமுறை கேட்டும் வழங்கப்படாத ஆவணங்கள் மற்றும் தகவல்களைப் பெறவும் நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளார். சமரசப் பேச்சுவார்த்தை முயற்சிகள் முடிவடைந்ததால் வழக்கு தொடர்ந்ததாக அவரது தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேணு சீனிவாசனுக்கு சுதர்ஷன் வேணு, லட்சுமி வேணு என ஒரு மகனும் மகளும் உள்ளனர். டிவிஎஸ் மோட்டார் கம்பெனியை சுதர்ஷன் வேணு வழிநடத்தி வருகிறார்; சுந்தரம்–கிளேட்டன் நிறுவனத்தின் பொறுப்பு லட்சுமி வேணுவிடம் உள்ளது. 2025 ஏப்ரலில் சுதர்ஷன் வேணுவை டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் முக்கியப் பலனளிக்கும் உரிமையாளராகச் சேர்க்க எடுத்த முடிவையும் லட்சுமி வேணு கேள்வி எழுப்பியுள்ளார். டிவிஎஸ் ஹோல்டிங்ஸ், டிவிஎஸ் மோட்டார் கம்பெனி, டிவிஎஸ் கிரெடிட் சர்வீசஸ், சுந்தரம்–கிளேட்டன் உள்ளிட்ட நிறுவனங்களில் தந்தைக்குள்ள பங்குகளைத் தனக்கும் சகோதரருக்கும் சமமாகப் பிரிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். மகனுக்கு அதிக உரிமை என்ற நிலைப்பாடு சட்டப்படி தவறு எனவும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். தாயார் மல்லிகா சீனிவாசன், லட்சுமி வேணுவுக்கு நியாயமான பங்கு வழங்க ஆதரவு தெரிவித்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது. வழக்கில் நீதிமன்றம் எடுக்கும் முடிவு நவம்பர் 27ஆம் தேதி தெரியவரும்.



பழனி பஸ் நிலையத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது!

பழனி நவம்பர் 26–

பழனி பஸ் நிலையத்தில் கரூர் திண்டுக்கல் மதுரை பொள்ளாச்சி கோவை செல்லும் பஸ்கள் நிற்கும் இடங்களில் ஆக்கிரப்புகள் அதிகமாக உள்ளது என்றும், இதனால் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளதாக புகார் வந்தது.

இதையொட்டி நகராட்சி நிர்வாகம் கமிஷனர் ராஜலட்சுமி உத்தரவின் பேரில், பழனி பஸ் நிலையத்தில் ஆக்கிரப்பு அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதனால் தற்போது அங்கு எவ்வித இடையூறும் இன்றி உள்ளது.

கூட்டுறவு நகைக்கடன்: கிராமுக்கு ரூ.10,000 வரை!



சென்னை, நவ. 26–

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் நகைக்கடனுக்கான உச்சவரம்பு, ஒரு கிராம் தங்கத்துக்கு ரூ.7,000 என்பதிலிருந்து ரூ.10,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது. கடன் தொகை நகையின் சந்தை மதிப்பில் 75 சதவீதத்துக்கு உட்பட்டு நிர்ணயிக்கப்படும். எனவே, கிராமுக்கான உச்சவரம்பையும் சந்தை மதிப்பின் 75 சதவீதத்தையும் கணக்கிட்டு, பொருந்தும் தொகையே கடனாக வழங்கப்படும்.

இந்த நடைமுறை புதிதாக வழங்கப்படும் நகைக்கடன்களுக்கும், புதுப்பிக்கப்படும் கடன்களுக்கும் பொருந்தும் என கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் நகைக்கடன்களுக்கான வட்டி விகிதத்தையும் சீரமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருப்பூரில் அதிநவீன கேத் லேப் மெஷின் அறிமுகம்!



திருப்பூர், நவ.26–

திருப்பூர் அவிநாசி சாலை குமார் நகர் பகுதியில் ரேவதி மருத்துவமனை இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையில் பல்வேறு விதமான மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நாள்தோறும் இருதய நோயால் பாதிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கொங்கு மண்டலத்தில் முதன்முறையாக முற்றிலும் ஏ ஐ தொழில்நுட்பத்துடன் இயங்கக்கூடிய அதிநவீன கேத்தலப் என்ற மெஷின் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அதிநவீன தொழில்நுட்பத்துடன் இயங்கக்கூடிய மெஷின் தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மருத்துவமனையின் தலைமை மருத்துவர். ஈஸ்வரமூர்த்தி கூறுகையில் இந்த அதிநவீன தொழில்நுட்பத்துடன் இயங்கும் இந்த இருதய சிகிச்சை மெஷின் மூலம் இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு துல்லியமான முறையில் இருதய பாதிப்பு எவ்வாறு உள்ளது என்பதை கண்டறிய முடியும் என்றும் இந்த தொழில்நுட்பம் என்பது கொங்கு மண்டலத்தில் இருக்கும் பொதுமக்களுக்கு மிகச்சிறப்பாக இருக்கும் என்றும் பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும் கூறினார்...

மரணத்திலும் மனிதநேயம்: மருத்துவக் கல்விக்காக உடல் தானம்!

திருப்பூர், நவ. 26–

காங்கேயம் சாலை ராக்கியாபாளையத்தைச் சேர்ந்த ஆடிட்டர் அன்பழகனின் தாயார் காந்திமதியம்மாள் (86), வயது மூப்பு காரணமாக இன்று காலை உயிரிழந்தார். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் முதல் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வரும் அன்பழகன், அக்க ட்சியின் மாநில ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினராக உள்ளார்.



காந்திமதியம்மாள், உயிரிழப்பதற்கு முன்பே தனது உடலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தானமாக வழங்க ஒப்புதல் அளித்திருந்தார். அதன்படி, அவரது உடலை மகனும் உறவினர்களும் மதிமுக நிர்வாகிகள் மற்றும் பெரியாரிய உணர்வாளர்களுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் சண்முகப்பிரியாவிடம் ஒப்படைத்தனர். மருத்துவ மாணவர்களின் கல்விக்காக அவரது உடல் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மதிமுகவின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். காந்திமதியம்மாளின் உடலைத் தானமாக வழங்கிய அன்பழகன் குடும்பத்தினரை மருத்துவமனை சார்பில் பாராட்டி, சான்றிதழ் வழங்கப்பட்டது.

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு ஊராட்சி செயலர் பணி: 1,400+ காலியிடங்கள்!



நிறுவனம்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு
பணி வகை: தமிழ்நாடு அரசு வேலை
பணிநிலை: நிரந்தரப் பணி
காலியிடங்கள்: 1,400–க்கும் மேற்பட்ட ஊராட்சி செயலர் பணியிடங்கள்
பணியிடம்: தமிழ்நாடு முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்: 04.12.2026
கடைசி நாள்: 18.12.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: tnrd.tn.gov.in

சித்தா டாக்டர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்!



மதுரை, நவ. 26–

மதுரை அரசு மருத்துவமனை, உசிலம்பட்டி அரசு மருத்துவமனை, மாவட்ட சித்தா மருத்துவ அலுவலகத்தில் உள்ள காலிப்பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான டாக்டர்கள் பணிக்கு விண்ணப்பிக்கலாம்.

பொது சுகாதாரம், மதுரை மாவட்ட நலவாழ்வு சங்கம் சார்பில் சித்தா டாக்டர் மற்றும் பிற பணியாளர்களுக்கு விண்ணப்பிக்கலாம். மருத்துவ ஆலோசகர் (யோகா மற்றும் இயற்கை நல்வாழ்வு) பணிக்கு பி.என்.ஒய்.எஸ். படிப்பும், 3 மருத்துவ அலுவலர்கள் (ஆயுஷ்) பணிக்கு பி.எஸ்.எம்.எஸ். படிப்பும் முடித்திருக்க வேண்டும். மாதத் தொகுப்பூதியம் ரூ.40 ஆயிரம். வயது 59க்குள் இருக்க வேண்டும். சிகிச்சை உதவியாளர், மருந்து வழங்குநர், முதுநிலை ஆய்வக நுட்புநர், ஆடியோலாஜிஸ்ட், ஆக்குபேஷனல் தெரபிஸ்ட், எக்கோ டெக்னீசியன் பணியிடங்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.

இப்பணிகள் தற்காலிகமானவை. தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமோ டிச. 7க்குள் ஒப்படைக்க வேண்டும்.

முகவரி: மாவட்ட செயற்செயலாளர், மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம், விஸ்வநாதபுரம், மதுரை 625 014. தொலைபேசி: 0452–264 0778.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை, நகர்புற நலவாழ்வு மையம் மற்றும் சித்தா ஆகிய இடங்களில் உள்ள 33 காலிப்பணியிடங்கள்!

நீலகிரி, நவ. 26–

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தனது அறிக்கையில்:– மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, நகர்புற நலவாழ்வு மையம் மற்றும் சித்தா ஆகிய இடங்களில் உள்ள காலிப்பணியிடங்களுக்கு Therapeutic Assistant–1, Audiologist–Speech Therapist–1, Audiologist1, Audiomatrician–1, Radiographer–2, Blood Bank Technicia–1, Councellor–1, MTM Health Inspector (Gr–II) –10, Special Educator for Behavioural Therapy–1, District Account Assistant–1, Security –3 and Multipurpose Hospital Worker Support Staff 10 ஒப்பந்த அடிப்படையில்மொத்த காலிபணியிடங்கள் –33 நிரப்பப்பட உள்ளது.



இதற்கான விண்ணப்பங்கள் 07.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம்,38, ஜெயில் ஹில் ரோடு, சிடிஸ்கேன் (அருகில்), ஊட்டி 643 001, தொலை பேசி எண் : 0423–2449250 என்ற முகவரிக்கு உரிய விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. இந்த பதவிக்குரிய தகவல்கள் மற்றும் விண்ணப்பபடிவம் நீலகிரி மாவட்ட தகவல் மையத்தில் (nilgiris.nic.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த பணியிடங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

தமிழ் எண்ணெய் பலகாரம்
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு மற்றும் வடமாநில இனிப்பு தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்
2331731
4377877

இன்றைய கார்ட்டூன்

திருப்பரங்குன்றம் தீபத் தீர்ப்பு: ஆதரவும் எதிர்ப்பும்!





தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில், 19,710 குடும்பங்களைச் சேர்ந்த 36.638 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் பயன்பெறும் வகையில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திரப் பணக்கொடை வழங்கும் நிகழ்வை 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பயனாளிகளுக்கு அதற்கான ஆணைகளை வழங்கித் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் க.தென்னரச, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் எ. சுந்தாவல்லி, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை இயக்குநர் ச.வளர்மதி, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை இணைச் செயலாளர் மா.செள.சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசு ஆஸ்பத்திரிகளில் இனி ரூ.1,100-க்கு 'டயாலிசிஸ்'!

சென்னை, நவ. 26–

தமிழ்நாட்டில் சிறுநீரக பாதிப்பு உள்ள நோயாளிகள் இனி அரசு ஆஸ்பத்திரிகளில் ரூ.1,100 கட்டணத்தில் டயாலிசிஸ் சிகிச்சை பெற முடியும். முதல்வர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவசமாக சிகிச்சை பெற முடியாதவர்களுக்கும் இந்த புதிய திட்டம் உதவியாக இருக்கும்.

தமிழ்நாட்டில் சிறுநீரக பாதிப்பு உள்ள நோயாளிகள் அதிகரித்து வருகிறார்கள். தனியார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற வசதி இல்லாத ஏழை குடும்பத்தைச் சேர்ந்த நோயாளிகள் அரசு ஆஸ்பத்திரியை நம்பியே வாழ்கிறார்கள்.

2 சிறுநீரகமும் செயலிழந்த நோயாளிகள் தங்களது உயிரை பாதுகாத்துக் கொள்ள ரத்தத்தை சுத்திகரிப்பு செய்ய வேண்டும். வாரத்துக்கு 2 அல்லது 3 முறை டயாலிசிஸ் செய்து சிறுநீரகம் தானமாக கிடைக்கும் வரை உயிருக்காக போராடுகின்ற நிலை உள்ளது.

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அரசு ஆஸ்பத்திரிகளில் இலவசமாக டயாலிசிஸ் செய்யப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் எவ்வித கட்டணமும் இல்லாமல் இலவசமாக டயாலிசிஸ் செய்து கொள்கிறார்கள். ஆனால் அரசு ஆஸ்பத்திரிகளில் டயாலிசிஸ் செய்து கொள்ள காத்திருக்க வேண்டிய நிலையும் தாமதமும் ஏற்படுகிறது. அதனால் தனியார் ஆஸ்பத்திரிகளில் அதிக கட்டணம் செலுத்தி டயாலிசிஸ் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.



இந்த நிலையை மாற்ற அரசு ஆஸ்பத்திரிகளில் குறைந்த கட்டணத்தில் டயாலிசிஸ் செய்ய வழிவகை காணப்படுகிறது.

அரசு ஆஸ்பத்திரிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் டயாலிசிஸ் சிகிச்சை அனைத்தையும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தபுதிய நடைமுறை செயல்பாட்டிற்கு வரும் நிலையில் அரசு ஆஸ்பத்திரிகளில் இனி முதல்வர் காப்பீடு இல்லாதவர்களும் குறைந்த கட்டணத்தில் டயாலிசிஸ் சிகிச்சைகளை பெற முடியும்.

சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பரிசோதனைகள் மலிவான கட்டணத்தில் அரசு ஆஸ்பத்திரியில் வழங்கப்படுகிறது. அது போலவே டயாலிசிஸ் சிகிச்சை வழங்கப்பட உள்ளது. அரசு ஆஸ்பத்திரிகள், மாநகராட்சி ஆஸ்பத்திரிகள் என 146 இடங்களில் டயாலிசிஸ் மையங்கள் செயல்படுகின்றன. கடந்த நிதியாண்டில் 9400 நோயாளிகளுக்கு 9 லட்சத்துக்கும் மேற்பட்ட டயாலிசிஸ் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்துடன் டயாலிசிஸ் சிகிச்சை முறை இணைக்கப்படும்போது அரசு ஆஸ்பத்திரியில் பொதுமக்கள் குறைந்த கட்டணத்தில் அந்தந்த பகுதிகளில் டயாலிசிஸ் செய்து கொள்ள முடியும்.

இது குறித்து அதன் மேலாண்மை இயக்குனர் எஸ்.பி.அம்ரித் கூறுகையில், 'முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தில் ஒரு டயாலிசிஸ் சிகிச்சைக்கு தற்போது ரூ.1,100 ஒதுக்கப்படுகிறது. அதே கட்டணத்தில் காப்பீடு இல்லாதவர்களுக்கும் அந்த சிகிச்சை அளிக்க வாய்ப்பு உள்ளது.

ஸ்கேன் பரிசோதனைகளுக்கு தனியாரை விட பல மடங்கு குறைவாக அரசு கட்டணம் வசூலிக்கிறது. அதைப்போலவே டயாலிசிஸ் சிகிச்சைகளையும் வழங்க ஆலோசித்து வருகிறோம்' என்றார்.

இதற்கான திட்ட முன்மொழிவு அரசின் பரிசீனையில் உள்ளது. விரைவில் அதற்கான அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தவெகவுக்கு ஆதரவு அளித்தது ஏன்? - மன்னார்குடி எம்.எல்.ஏ. காமராஜ் விளக்கம்!

திருவாரூர், நவ. 26–

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள தனது அலுவலகத்தில் எஸ்.காமராஜ் எம்.எல்.ஏ. நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

மன்னார்குடி சுற்றுவட்ட சாலைக்கு இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ.46 கோடியை தமிழக அரசு ஒதுக்கி உள்ளது. மன்னார்குடியில் நிலவும் பிரச்சினைகள் குறித்து முதல்–அமைச்சரிடம் பேசி இருக்கிறேன். தற்போது வேலை இல்லாமல் சிரமப்படும் விவசாய தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்று ஆணித்தரமாக வலியுறுத்தினேன்.

இதை கவனமாக கேட்டுக்கொண்ட முதல்–அமைச்சர், திருவாரூர் உள்பட டெல்டா மாவட்டங்களுக்கு ஒரு குழுவை அனுப்பி இங்கு விவசாயிகள். விவசாய தொழிலாளர்கள் படும் துயரங்களை போக்க நடவடிக்கை எடுப்போம் என உத்தரவாதம் அளித்துள்ளார். அதேபோல் தி.மு.க.வும் ஒரு குழுவை அனுப்பி இருப்பதை வரவேற்கி றோம்.



அந்த வகையில் அவர்கள் முதல்–அமைச்சருக்கு ஆலோசனை சொல்லலாம் தவறில்லை.

ஆனால் ஆளுகின்ற முதல்–அமைச்சரால் மட் டுமே உதவி செய்ய முடியும். எதிர்க்கட்சி அறிக்கையை மட்டுமே கொடுக்க முடியும். அமைச்சர் செங்கோட்டையனை நானும், அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஓ.எஸ்.மணியனும் சந்தித்து டெல்டா மாவட்டங்களின் வறட்சி நிலவரம் கண்டறிய ஒரு கமிட்டி அனுப்புங்கள் என்று வலியுறுத்தினோம்.

கடந்த மே மாதம் 12–ந் தேதி சபாநாயகர் தேர்தல் நடந்தது. அதில் பங்கு பெற்றேன். அன்று மதியமே அ.ம.மு.க.வில் இருந்து என்னை விலக்கி விட்டார்கள். 13–ந் தேதி முதல்–அமைச்சர் விஜய்க்கு ஆதரவாக நான் கை தூக்கினேன். அதன்பிறகு சட்டசபையில் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவாக இருந்தேன். அதனால் தான் மன்னார்குடி தொகுதிக்கு நிறைய திட்டங்களை கொண்டுவர முடிந்தது. ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருப்பதால் தான் நிறைய திட்டங்களை நிறைவேற்ற முடிந்தது.

த.வெ.க.வில் இணைவீர்களா? என கேட்கிறார்கள். அதற்கான சூழ்நிலை வரும்போது உங்களிடம் கூறிவிட்டுத்தான் இணைவேன். அதனால் எந்தவித நெருக்கடியும் எனக்கு கிடையாது. எந்த நெருக்கடியும் என்னை கட் டுப்படுத்தாது. நான் ஒரு தனி எம்.எல்.ஏ. அரசியல் ரீதியாக முடிவெடுக் கும்போது அனைவரிடமும் கூறி விட்டுத்தான் முடிவு எடுப்பேன். கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. விவகாரத்தில் சட்டம் தன் கடமையை சரியாக செய்யும் என்று நம்புகிறேன். மன்னார்குடி நகரை ஒரு தூய்மையான நகராக மாற் றுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

'ஸ்வீப்பிங் ஆபரேஷன்' என்ற பெயரில் தீவிர வாகன சோதனை!

மீனம்பாக்கம், நவ. 26–

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 'ஸ்வீப்பிங் ஆபரேஷன்' என்ற பெயரில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் தீவிர வாகன சோதனை மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். விமான நிலையத்துக்கு வரும் அனைத்து வாகனங்களும் மோப்ப நாய்களின் உதவி யுடன் தீவிரமாகச் சோதனை செய்யப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றன. கார்களில் கொண்டு வரப்படும் பொருட்களும் முழுமையாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. விமான நிலையம் முழுவதும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலேயே இந்த தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.



தவெக எம்எல்ஏ மீது புகார்: தொடரும் விசாரணை?

சென்னை, நவ. 26–

கள்ளக்குறிச்சி தவெக சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ், பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக எழுந்த புகார் தொடர்பாக, ஐந்து பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங், நேற்று தனது விசாரணையைத் தொடங்கினார்.

முதற்கட்டமாக, வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த அவர், தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மாவட்ட ஆட்சியரிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி வாக்குமூலம் பெற்றார்.

தொடர்ந்து, (25,11,2026)மாலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு



அதிகாரிகளிடமும் விசாரணை மேற்கொண்டார். இன்று காலை மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலரிடமும் விசாரணை நடத்தினார்.

இந்நிலையில், இரண்டாவது நாளாக (26.11.2026) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகத்திற்கு விசாரணை அதிகாரி சிருஷ்டி சிங் நேரில் வருகை தந்துள்ளார். அங்கு மாவட்ட ஆட்சியரிடம் மீண்டும் விசாரணை மேற்கொள்ள உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், மாவட்ட ஆட்சியர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ள பல்வேறு தகவல்கள் மற்றும் குறிப்புகள் தொடர்பாக விசாரணை அதிகாரி கூடுதல் கேள்விகளை எழுப்பி, இன்றும் வாக்குமூலம் பெற வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரின் கணவரிடமும் விசாரணை நடத்த விசாரணை அதிகாரி திட்டமிட்டுள்ளதாகக் காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால், தவெக சட்டமன்ற உறுப்பினர் மீதான புகார் தொடர்பான விசாரணை கள்ளக்குறிச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உயரத் தொடங்கிய தங்கம் விலை?

சென்னை, நவ. 26–

தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.960 உயர்ந்து ரூ.92,320–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.120 உயர்ந்து ரூ.11,540–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி 165 ரூபாய்க்கும் ஒரு கிலோ வெள்ளி ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



நாடு முழுவதும் 324 தரமற்ற மருந்துகள் - பரிசோதனையில் கண்டுபிடிப்பு!

புதுடெல்லி, நவ. 26–

குறைபாடுள்ள மருந்து தொகுதிகளை சந்தையிலிருந்து உடனடியாகத் திரும்பப் பெறும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு கடந்த மாதத்தில் நாடு முழுவதும் மாதாந்திரத் தரப் பரிசோதனை நடத்தியது. இதில் மாநில அளவில் நடத்தப்பட்ட சோதனையில் 287 மருந்துகளும், மத்திய அளவில் நடந்த சோதனையில் 37 மருந்துகளும்



தரமற்றவை எனக் கண்டறியப்பட்டன.

குறைபாடுள்ள இந்த மருந்து தொகுதிகளைச் சந்தையிலிருந்து உடனடியாகத் திரும்பப் பெறும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதேசமயம், அரசு ஆய்வகங்களில் பரிசோதிக்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு தொகுப்பு மருந்துகளுக்கு மட்டுமே இந்தத் தரமற்ற வகைப்பாடு பொருந்தும் என்றும், சந்தையில் விற்பனை செய்யப்படும் அதே மருந்தின் பிற தொகுப்புகளின் தரம் குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் மத்திய சுகாதார அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

பிஸ்லெரி விவகாரம் எதிரொலி: நாடு முழுவதும் பாட்டில் குடிநீரை சோதிக்க FSSAI முடிவு!

புதுடெல்லி, நவ. 26–

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI), பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீரைப் பரிசோதிப்பதற்காக நாடு தழுவிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. ஆய்வக முடிவுகள் ஒன்று முதல் 2 மாதங்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக FSSAI தலைமைச் செயல் அதிகாரி ரஜித் புன்ஹானி நேற்று தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நுகர்வோர் நலன்களைப் பாதுகாப்பதற்குமான தனது முயற்சிகளின் ஒரு பகுதியாக, FSSAI நாடு முழுவதும் இருந்து மாதிரிகளைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளது.

"இந்தச் செயல்முறை தொடங்கி விட்டது. நாங்கள் இதை நாடு முழுவதும் செய்து வருகிறோம்" என்று ஒரு நிகழ்ச்சியில் செய்தியாளர்களிடம்



புன்ஹானி கூறினார்.

இதற்கான காலக்கெடு குறித்துக் கேட்டபோது, அவர், "இது மிகவும் பெரிய நாடு. எனவே, இதற்கு குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் ஆகும் என்று நினைக்கிறேன்," என்றார்.

"இந்த நடவடிக்கை எந்தவொரு குறிப்பிட்ட சம்பவத்தையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, இது பல்வேறு உணவு வகைகளை ஆய்வு செய்வதற்கான FSSAI–இன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும்," என்று புன்ஹானி கூறினார். "கடந்த ஆண்டு நாங்கள் பல விஷயங்களை ஒவ்வொன்றாகக் கையாண்டோம். பால் பொருட்கள், இறைச்சி, முட்டை, தானியங்கள், ஆற்றல் பானங்கள் மற்றும் சர்க்கரை பானங்கள் ஆகியவற்றை நாங்கள் ஆராய்ந்தோம். தண்ணீரும் அந்தச் செயல்முறையின் ஒரு பகுதியாகும்," என்று அவர் கூறினார். பிஸ்லெரி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பாட்டில் குடிநீர் மாதிரி பாதுகாப்பற்றது என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பிஸ்லெரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க FSSAI அனுமதி அளித்த சில நாட்களுக்குப் பிறகு இந்த நாடு தழுவிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிஸ்லேரிக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எப்போது தொடங்கும் என்று கேட்டதற்கு, புன்ஹானி, "இது ஒரு சாதாரண விஷயம், அது நடக்கும்" என்று பதிலளித்தார்.

திருப்பதி வரலாற்றில் முதல்முறை! 121 கிலோ தங்க நகை காணிக்கை செலுத்திய பக்தர்!

திருப்பதி, நவ. 26–

திருப்பதி வரலாற்றிலேயே ஒரு தனிநபர் இவ்வளவு அதிக அளவிலான தங்க ஆபரணங்களை காணிக்கையாக செலுத்துவது இதுவே முதல்முறையாகும். கிரீடம், சங்கு, சக்கரம், தோள், கை, பாதங்களுக்கு அணிவிக்கும் ஆபரணங்கள், ஒட்டியாணம் என 45 வகையான ஆபரணங்கள், ஏழுமலையானின் தலை முதல் பாதம் வரை அணிவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு காணிக்கையாக வழங்கப்பட்டுள்ளது. திருப்பதியில் இன்று நடைபெற்ற நிகழ்வில், ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு முன்னிலையில், சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் வர்த்தமான் ஜெயின் என்பவர், இந்த காணிக்கை தேவஸ்தான



அதிகாரிகளிடம் முறைப்படி ஒப்படைத்தார்.

நாளை காலை நடைபெறும் அபிஷேகத்துக்குப் பிறகு, வர்த்தமான் வழங்கிய ஆபரணங்களைக் கொண்டு ஏழுமலையான் அலங்கரிக்கப்படுவார் என்று தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னதாகவும் திருப்பதி தேவஸ்தானத்துக்கு பல்வேறு காணிக்கைகளை வர்த்தமான் ஜெயின் வழங்கியுள்ளார். மின்சார பேருந்துகள், ஸ்ரீ வெங்கடேஸ்வர பக்தி சேனல் மேம்பாட்டிற்காக ரூ. 7 கோடி, தேவஸ்தான கோசாலையில் கால்நடைத் தீவனக் கலவை ஆலை அமைப்பதற்காக ரூ. 5 கோடி, உண்டியல் காணிக்கை நாணயங்களை எண்ணும் இயந்திரத்திற்காக ரூ. ஒரு கோடி உள்ளிட்ட காணிக்கைகள் வழங்கியுள்ளார்.

தற்போது தனது நிறுவனத்தின் 60 சதவிகித பங்குகளை விற்றதன் மூலம் சுமார் ரூ. 6,000 கோடி வர்த்தமன் ஜெயின் பெற்றதாகவும், அதிலிருந்து 121 கிலோ தங்கத்தை காணிக்கையாக அவர் முடிவு செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Published by Dr.P.Pandiarajan, No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Editor. Dr. P. Pandiarajan. TN/WPP–143/SR/2018–2020